**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்புவனம்**

**முன்னிலை – திரு.R.வெங்கடேஷ் பிரசாந்த், B.A.,B.L.(Hons),**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், திருப்புவனம்**

**2056, திருவள்ளுவர் ஆண்டு, விசுவாவசு வருடம், மாசி மாதம் 6–ம் தேதி**
**2026– ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 18–ம் நாள் புதன்கிழமை**

**IA No.4/2025**
**in**
**OS no.58/2024**

---

1.மு.பாக்கியம்
2.மு.பாண்டி
3.மு.தனலெட்சுமி
4.மு.குமார்
5.மு.ஸ்ரீ தேவி ....மனுதாரர்கள்/வாதிகள்

**/எதிர்/**

1.அ.கோபிராஜன்
2.அ.செல்வராஜன்
3.அமுல்ராஜன்
4.தனபாலன்
5.அ.அய்யனார்
6.க.கருப்பையா
7.க.பாலு
8.மு.ஆறுமுகம்
9.மு.அய்யனார்
10.மு.முனியசாமி .....எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு என் முன்பாக 16.02.2026–ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்த போது மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திருM.பிரசாத் அவர்கள் ஆஜராகியும் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.P.செந்தில்குமார் அவர்கள் ஆஜராகியும் ஆவணங்கள் பரிசீலனை செய்தும், இருதரப்பு வாதங்களைக் கேட்டும் இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**உத்தரவு**

அசல் பிராதினை சீர்திருத்தம் செய்துகொண்டு, திருத்தப்பட்ட பிராது தாக்கல் செய்ய அனுமதி அளித்து உத்தரவிட வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>1) மனுதாரர்கள்/வாதிகள் தரப்பு மனுவின் சுருக்கம்:</u>**

மனுதாரர் இந்த நம்பர் மனுவில் 2ம் மனுதாரர்/ 2ம் வாதி. இதர

VENKADESHPRASANTH Digitally signed by VENKADESHPRASANTH Date: 2026.02.18 17:31:59 +0530

மனுதார்கள்/வாதிகளுக்காகவும், சேர்த்து 2ம் மனுதாரரே இந்த அபிடவிட்டை தாக்கல் செய்து கொள்கிறார். மனுதாரர்களால் பிராது தாக்கல் காலத்தில் ஆவண எண்: 3099/2016 என்ற செட்டில்மெண்ட் ஆவணத்தை செல்லாது மற்றும் இல்லா நிலையது என Null and void பரிகாரம் கோரியும், 2 முதல் 5 வரை வாதிகள் மற்றும் 8, 9, 10 பிரதிவாதிகளின் தந்தை கி.முத்துவின் வீட்டுமனையை 5 முதல் 7 பிரதிவாதிகள் ஆக்கிரமித்திருப்பதை அகற்றி, வாதிகளிடம் ஒப்படைக்கவும், பிரதிவாதிகளோ அவரது அடியாட்களோ அல்லது அவர்களது முகவர்களோ வாதிகளுக்கு பாத்தியப்பட்ட தாவா சொத்தை எவ்வித வில்லங்க, விற்கிரையங்களும் தொந்தரவு செய்யக்கூடாதென நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், மேற்படி பரிகாரமானது சுவாதீனப்பரிகாரத்திற்கும், செயலுறுத்து கட்டளை பரிகாரத்திற்கும் தனித்தனி பரிகாரம் கோராமலும், நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றும், அதற்கான நீதிமன்ற கட்டணமாக நீதிமன்ற கட்டணச்சட்ட பிரிவு 25(d) மற்றும் 27(c) ன் படி நீதிமன்ற கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது என்றும், ஆனால் 5 முதல் 7 பிரதிவாதிகளால் குத்துக்கல் ஊன்றி ஆக்கிரமித்து இருப்பதாக பிராது பாரா 9 ல் கூறப்பட்டுள்ளது என்றும், ஆனால் அதற்கான பரிகாரம் குழப்ப நிலையில் உள்ளதால், இத்துடன் தாக்கல் பிராதில் கண்ட பரிகாரத்தையும், நீதிமன்ற கட்டணத்தையும், சீர்திருத்தம் செய்ய வேண்டியது அவசியமாக உள்ளது என்றும், எனவே இத்துடன் தாக்கல் மனுவில் கண்ட விபரப்படி அசல் பிராதினை சீர்திருத்தம் செய்துகொண்டு, திருத்தப்பட்ட பிராது தாக்கல் செய்ய அனுமதி அளித்து உத்தரவிட வேண்டியது அவசியமாக உள்ளது என்றும், அவ்விதம் இல்லாதுபோனால் 2ம் மனுதாரருக்கும், இதர மனுதாரர்களுக்கும் தாங்க இயலாத கஷ்ட நஷ்டம் ஏற்பட்டு விடும் என்றும், தாவா மனுவை தாக்கல் செய்து கொள்வதில் எதிர்மனுதார்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படக் கூடியதில்லை என்றும், எனவே, அசல் பிராதினை சீர்திருத்தம் செய்துகொண்டு, திருத்தப்பட்ட பிராது தாக்கல் செய்ய அனுமதி அளித்து உத்தரவிட வேண்டி மனுதாரர்களால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>2) எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு எதிர்வழக்குரையின் சுருக்கம்:–</u>**

மனுதாரர்கள் /வாதிகள் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக 4ம் எதிர்மனுதாரர்/4ம் பிரதிவாதி பெயரில் 4ம் எதிர்மனுதாரர் தாயார் எழுதிக்கொடுத்த தானசெட்டில்மெண்ட் பத்திரம் செல்லாது என விளம்புகை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளனர் என்றும், மனுதாரர்கள் /வாதிகள் தற்சமயம் தாவா வழக்கின்

VENKADESHPRASANTH
Digitally signed by VENKADESHPRASANTH
Date: 2026.02.18 17:32:08 +0530

பிராது பரிகாரத்தில் சுவாதீன ஒப்படைப்பு கேட்டு 2-ம் லக்க சொத்தில் 5 முதல் 7 பிரதிவாதிகள் ஆக்கிரமித்து ஊண்டியுள்ள குத்துக்கல்லை அகற்ற பரிகாரம் கோரியிருப்பது சட்டப்படி தவறான ஒன்றாகும் என்றும், மேற்படி 2-ம் லக்க சொத்தானது இந்த மனுதாரர்/வாதிக்கு பாத்தியப்பட்டது என காட்டுவதற்கு எவ்வித வருவாய் ஆவணமும் தாக்கல் செய்யப்படவில்லை என்றும், மேற்படி மனுவானது சட்டப்படியும், சங்கதிகள்படியும் ஏற்புடைதல்ல என்றும், மனுதாரர்கள்/வாதிகள் வழக்கு தாக்கல் செய்யும் போது மேற்படி பரிகாரங்கள் வேண்டுமென்றே பிராதில் சேர்க்காமல் விட்டுவிட்டு தற்சமயம் "ஆ" "இ"மற்றும் "ஈ" பரிகாரங்களை கோரியிருப்பது சட்டப்படி ஏற்புடையதல்ல என்றும், இந்த 5 முதல் 7 வரையிலான எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு பாத்திய்பட்ட சொத்தினை அபகரிக்க வேண்டுமென்ற கெட்ட எண்ணத்தில் பின்னீட்டு புதிய பரிகாரம் கோரியிருப்பது சட்டப்படி ஏற்புடையதல்ல என்றும், மனுதாரர்கள் /வாதிகள் தாக்கல் செய்திருக்கும் பிராதின் பரிகாரத்தை திருத்த கோரும் மனுவானது தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றும், ஏனெனில் இந்த மனுதாரர்கள்/வாதிகள் சுத்தமான கரங்களுடன் நீதிமன்றத்தை அணுகவில்லை என்றும், ஏனெனில் இந்த மனுதாரர்கள்/வாதிகள் திருத்த கோரும் மனுவில் "ஆ' பரிகாரத்திற்கு ரூ.4,48,000/- என மதிப்பீடு செய்துள்ளார்கள் என்றும், மேற்படி தாவா சொத்தின் மதிப்பானது சமூகம் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யும் போது இந்த மனுதாரர்கள்/வாதிகளுக்கு தெரியும் என்றும், மேற்படி பரிகாரத்தை வழக்கு தாக்கலாகும் போது கோராமல் தற்போது கோரியிருப்பது சட்டப்படி ஏற்புடையதல்ல என்றும், மனுதாரர்கள்/வாதிகள் திருத்தம் செய்ய கோரும் மனுவில் எனது பெயர் LONG CAUSE TITLE-ல் குறிப்பிடப்படவில்லை என்றும், ஆகவே மனுதாரர்கள்/வாதிகள் தாக்கல் செய்துள்ள திருத்த கோரும் மனுவினை செலவு தொகையுடன் தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டி எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) இம்மனுவில் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சனையானது இம்மனுவை அனுமதிக்கலாமா என்பதே ஆகும்?

4) மனுதாரர்கள் தரப்பில் 2ம் மனுதாரர்/2ம் வாதி தனக்காகவும், இதர மனுதாரர்கள்/வாதிகளுக்காகவும் சேர்த்து பிராது திருத்தல் மனுவை தாக்கல் செய்துள்ளார். மனுதாரர்கள்/வாதிகள் ஆதியில் தாவா அசல் வழக்கை ஆவண எண்.3099/2016 என்ற செட்டில்மெண்ட் ஆவணம் செல்லாது மற்றும்

VENKADESHPRASANTH Digitally signed by VENKADESHPRASANTH Date: 2026.02.18 17:32:21 +0530

இல்லாநிலையது என Null and void பரிகாரம் கோரியும், 2 முதல் 5 வாதிகள் மற்றும் 8, 9, 10 பிரதிவாதிகளின் தந்தை கி.முத்துவின் வீட்டுமனையை 5 முதல் 7 பிரதிவாதிகள் ஆக்கிரமித்திருப்பதை அகற்றி வாதிகளிடம் ஒப்படைக்கவும், பிரதிவாதிகளோ அவரது அடியாட்களோ அல்லது அவர்களது முகவர்களோ வாதிகளுக்கு பாத்தியப்பட்ட தாவா சொத்தை எவ்வித வில்லங்க விற்கிரையங்களும் தொந்தரவும் செய்யக்கூடாதென நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்திருந்ததாகவும், மேற்படி பரிகாரமானது சுவாதீன பரிகாரத்திற்கும், செயலுறுத்துக்கட்டளை பரிகாரத்திற்கும் தனித்தனி பரிகாரம் கோராமலும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டதாகவும், அதற்கான நீதிமன்ற கட்டணமும், தமிழ்நாடு நீதிமன்ற கட்டண சட்டம் பிரிவு 25(d) மற்றும் 27(c)ன் படி நீதிமன்ற கட்டணம் செலுத்தப்பட்டதாகவும், 5 முதல் 7 பிரதிவாதிகளால் குத்துக்கல் ஊன்றி ஆக்கிரமித்திருப்பதாக பிராது பாரா 9ல் கூறப்பட்டுள்ள நிலையில் அதற்கான பரிகாரம் குழப்ப நிலையில் உள்ளதாகவும், எனவே பிராதில் கண்ட பரிகாரத்தையும், நீதிமன்ற கட்டணத்தையும் சீர்திருத்தம் செய்ய வேண்டியது அவசியமாக இருப்பதாகவும், ஏற்கனவே பிராதில் கோரப்பட்ட "ஆ" பரிகாரத்தை முழுமையாக நீக்கிவிட்டு சுவாதீன மீட்டடைவு (Recovery of possesion) பரிகாரம் வழங்கியும் அவ்வாறு செய்ய தவறும் பட்சத்தில் வாதிகளே அகற்றிக்கொள்ள ஏதுவாக 5 முதல் 7 பிரதிவாதி மீது செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கியும், பரிகார காலத்தில் வரிசைகளை மாற்றியும் அதற்கான நீதிமன்ற கட்டண விபரங்களை மாற்றியும் பிராதை திருத்தம் செய்ய இந்த நிர் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

5) மாறாக, 4ம் எதிர்மனுதாரர்/4ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள கவுண்டர் அபிடவிட்டில் மனுதாரர்கள்/வாதிகள் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக 4ம் எதிர்மனுதாரரின் தாயார் எழுதிக்கொடுத்த தான செட்டில்மெண்ட் பத்திரம் செல்லாது என விளம்புகை பரிகாரம் கோரி அசல் வழக்கு தாக்கல் செய்திருப்பதாகவும், தற்பொழுது தாவா வழக்கின் பிராது பரிகார காலத்தில் சுவாதீன ஒப்படைப்பு கேட்டு ஆக்கிரமித்து ஊண்டியுள்ள குத்துக்கல்லை அகற்ற பரிகாரம் கோரியிருப்பது சட்டப்படி தவறான ஒன்று என்றும், மேற்படி 2ம் இலக்க சொத்து இந்த மனுதாரர்கள்/வாதிகளுக்கு பாத்தியமானது என காட்டுவதற்கு எவ்வித வருவாய் ஆவணமும் தாக்கல் செய்யப்படவில்லை என்றும், மனுவானது சட்டப்படியும், நியாயப்படியும் நிலைநிற்கத்தக்கதல்ல என்றும், வழக்கு தாக்கல் செய்யும் போதே பிராது

VENKADESHPRASANTH Digitally signed by VENKADESHPRASANTH Date: 2026.02.18 17:32:28 +0530

திருத்தல் மனுவில் கண்ட பரிகாரங்களை பிராதில் சேர்க்காமல் வேண்டுமென்றே விட்டுவிட்டு தற்போது மேற்படி பரிகாரங்களை ஆ, இ, ஈ பரிகாரங்களாக கோரியிருப்பது சட்டப்படி ஏற்புடையதல்ல என்றும், பிராது பரிகாரத்தை திருத்த கோரியுள்ள மனுவானது தள்ளுபடி செய்ய வேண்டியதாக உள்ளது என்றும், பிராதை திருத்தும் பட்சத்தில் ஆ பரிகாரத்திற்கு மதிப்பாக ரூ.4,48,000/– என மதிப்பீடு செய்துள்ளதாகவும், மேற்படி தாவா சொத்தின் மதிப்பானது சமூக நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யும்போதே மனுதாரர்கள்/வாதிகளுக்கு தெரியும் என்றும், எனவே மேற்படி பரிகாரங்களை திருத்த வேண்டுமாய் காலங்கடந்து தாக்கல் செய்திருக்கும் இம்மனு சட்டப்படி நிலைநிற்கத்தக்கதல்ல என்றும், தள்ளுபடி செய்ய வேண்டியதாக உள்ளது என்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் வாதுரை எடுத்துரைக்கப்பட்டது.

6) இருபுறமும் கேட்கப்பட்டதிலிருந்தும் வழக்கு கோப்பினை பரிசீலனை செய்த வகையிலும், மனுதாரர்கள்/வாதிகள் சுவாதீன மீட்டடைப்பு பரிகாரம் கோரி பிராதை திருத்தம் செய்ய கோருவதாலும் இந்நீதிமன்ற பண வரையறை அதிகாரத்தை விட அதிகமான மதிப்பு குறிப்பிட்டிருப்பதாலும் இவ்வழக்கு மாண்புமிகு சார்பு நீதிமன்றத்திற்கு மாற்றிட வேண்டியது அவசியமாக இருக்கிறது. தற்போது அசல் வழக்கும் விசாரணை காலத்தை எட்டாத நிலையிலும், வழக்கில் என்ன பரிகாரம் கோர வேண்டும் என்பது குறித்து தீர்மானிக்கும் உரிமை மனுதாரர்கள்/வாதிகளுக்கு உள்ளது என்ற அடிப்படையிலும், மனுதாரர்கள் பரிகாரத்தை திருத்த கோரியுள்ள பிராது திருத்தல் மனு அனுமதிக்க வேண்டியது அவசியம் என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

7) **முடிவாக**, மனுதாரர்கள்/வாதிகள் அசல் வழக்கை மனுவில் கண்டவாறு திருத்தம் செய்ய ஏதுவாக மனுதாரர்களின் பிராது திருத்தல் மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்த்து, பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2026–ம் வருடம் பிப்ரவரி மாதம் 18–ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

VENKADESHPRASANTH Digitally signed by VENKADESHPRASANTH Date: 2026.02.18 17:32:36 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், திருப்புவனம்

| |
|---|
| மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:இல்லை |

| |
|---|
| எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்:இல்லை |

VENKADESHPRASANTH Digitally signed by VENKADESHPRASANTH Date: 2026.02.18 17:32:44 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், திருப்புவனம்

s

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை
நடுவர் நீதிமன்றம், திருப்புவனம்
IA No.4/2025 in OS no.58/2024
உத்தரவு
நாள்:18.02.2026